(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 49.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மார்ச் 29 வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

31/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டுடன் ஆரம்பமான முதலாவது பாராளுமன்றத்திலிருந்து எட்டாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றம் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைகளில் இருந்த அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையானது, குறித்த அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கு ஏற்றவாறு நியாயமான பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் பெண்களுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

138/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

207/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாணந்துறை வேகட ஜன உதானகம கிராமத்தில் வீடுகளைப்பெற்ற பயனாளிகள் 35 பேர் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த இடத்தில் வசிக்கின்றனர் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு அப்போதைக்கு நகர சபை உறுப்பினராக இருந்த திரு பியசேன பர்னாந்துவினால் வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென பாணந்துறை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டு பாணந்துறை நகர சபையினால் நில அளவைக் கட்டளையொன்றைப் பெற்று அந்தக் காணிகளை அளந்து உறுதி பத்திரங்களை வழங்க தயார் நிலையில் இருந்ததையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு மே மாதம் தற்போதய பாணந்துறை நகரச் சபை மீண்டும் அந்த யோசனையை ஏகமனதாக நிறைவேற்றியது என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) வேகட ஜன உதானகம வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு இதுவரை சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அந்த வீடுகளைப்பெற்ற பயனானிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கும் திகதி யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

4.

338/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அலைதாங்கி இன்மையால் நாச்சதூவ குளத்தின் குளக்கரை நீர் அலைகளின் தாக்கத்தால் அரிப்புக்குளாகும் ஆபத்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குளக்கரையின் பாதுகாப்புக்காக அலைதாங்கியை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

493/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற பேருந்து தரிப்பிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த திகதி தொடக்கம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுக்கான ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட பேரூந்து தரிப்பிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) ஏனைய பேருந்துத தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

516/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை யாது;

(ii) 2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(iv) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு குறிப்பிட்ட ஒவ்வொரு பணியாட்டொகுதியிலும் பணிபுரிபவர்களின் பெயர், முகவரி, வதியும் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவை உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

539/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் வங்கியின் சேவை நீடிப்பு வழங்கும் கொள்கைக்கு அமைய வயது 60 வரை சேவை நீடிப்பு வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) முகாமைத்துவம், இந்த சேவை நீடிப்பு வழங்கும் கொள்கையை அமுல்படுத்தும் போது வங்கியின் ஊழல்களை வெளிப்படுத்திய தொழில் சங்கத் தலைவர்களை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(iii) அதற்கமைய, மக்கள் வங்கியை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பில் வெளிப்படைத்தன்மைமிக்க விசாரணையைக் கோரிய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின், மக்கள் வங்கிக் கிளையின், முன்னாள் தவிசாளர் திரு எஸ்.கே.டி. ஹேவாபத்திரனவுக்கு வழங்கப்பட்டிருந்த தொழில் சங்க நடவடிக்கைகளுக்கான விடுவிப்பதானது முதலில் ரத்துச் செய்யப்பட்டது என்பதையும்;

(iv) இதனை அடுத்து அவர் கோரிய சேவை நீடிப்பை வழங்காது அவரை ஓய்வு பெறச்செய்ய முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதையும்;

(v) அவர் கோரிய விசாரணை நடாத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு ஹேவாபத்திரன கோரிய சேவை நீடிப்பு வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iii) திரு. ஹேவாபத்திரன கோரிய விசாரணை நடாத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

680/ '18

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாழும் மூத்த பிரசைகளுக்கு (60 வயதைக் கடந்தவர்கள்) அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலனோம்புகை வசதிகள் யாவை;

(ii) 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மூத்த பிரசைகளின் சனத்தொகை வீதம் ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்றவாறு எவ்வளவு;

(iii) எதிர்வுகூறல்களுக்கேற்ப 2021 ஆம் ஆண்டில் இவ்வீதம் எவ்வளவாக காணப்படும்;

(iv) இலங்கையில் மூத்த பிரசைகளின் வீதம் வருடாந்தம் துரிதமாக அதிகரிக்கின்றதென்பதை அவர் அறிவாரா;

(v) ஆமெனில், அதிகரிக்கும் இந்த மூத்த பிரசைகளின் பாதுகாப்பிற்கும் நலனோம்புகைக்கும் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூத்த பிரசைகளுக்கு வழங்கப்படும் சிரேஷ்ட பிரசைகள் அடையாள அட்டையின் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் சலுகைகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) மூத்த பிரசைகளின் நிலையான வைப்பிலிருந்து அறவிடப்படும் வரியிலிருந்து இவர்களுக்கு விலக்களிப்பதற்கு உங்கள் அமைச்சு தலையிடுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கையில் உள்ள வயோதிபர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இந்த வயோதிபர் இல்லங்களின் தரத்தை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்கள், தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக 2019 மார்ச் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபதாவது நாள்) — குழு (முன்னேற்றம், மார்ச்சு 28).

* 2.

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கமைய 2018.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.06.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

3.

பா. 48/ ’19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ பிமல் ரத்நாயக்க,— இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு,—

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அதன் A/RES/69/237 ஆம் இலக்க *‘நாட்டு மட்டத்தில் அபிவிருத்திச் செற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்’* என்ற தீர்மானத்தின் மூலம் அபிவிருத்திச் செயற்பாடுகளின் மதிப்பீட்டிற்காக நாடுகளின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதில் 2015 ஆம் வருடத்தை சர்வதேச மதிப்பீட்டு வருடமாக பிரகடனப்படுத்தியுள்ளதாலும்;

மதிப்பீட்டிற்கான பூகோள பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட “பொறுப்பான பாராளுமன்றங்கள்: 2030 நிகழ்ச்சி நிரலுக்காக மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ளல்” என்ற தலைப்பிலான மாநாட்டில் ‘EvalColombo 2018’ இல் 2018 செப்டம்பர் 17 ஆம் திகதி பிரதம அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தின் அமைச்சரவையினால் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை (NEP) ஏற்றுக்கொள்ளப்பட்டதனாலும்;

தேசிய மதிப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் பொறிமுறை ஆகியன தாபிக்கப்படுவதற்கு வசதியளிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்கக் கூடிய இயலுமான சூழலை உருவாக்குவதற்கு, 2018 செப்டம்பர் 18 இல் இலங்கை பராளுமன்றத்தில் கைச்சாத்திடப்பட்ட கொழும்பு பிரகடனத்தில் அர்ப்பணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனாலும்;

இலங்கை கையொப்பமிட்டுள்ள, ஐக்கிய நாடுகளினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் எனும் சூழமைவில் மதிப்பீடு முக்கியமானதாக மாறியுள்ள காரணத்தினாலும்;

மதிப்பீட்டின் விதிகள் மற்றும் அளவுகோல்கள் மீது சகல உலகளாவிய பங்காளர்களும் கொடையாளர்களும் அவர்களின் சகல கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வரையறை செய்துள்ள காரணத்தினாலும்;

இலங்கைப் பாராளுமன்றம் பிரதிச் சபாநாயகரின் தலைமையிலான மதிப்பீட்டிற்கான இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மன்றின் கலந்துரையாடல்கள் மூலம் சான்றடிப்படையிலான சட்டமியற்றல், வரவு - செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் மேற்பார்வைச் செயற்பாடுகள் ஆகியவற்றிற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறையின் பொருத்தப்பாடு மற்றும் தேவை ஆகியவற்றினை அடையாளங்கண்டு அங்கீகரித்துள்ள காரணத்தினாலும்;

அரசியலமைப்பின் உறுப்புரை 148 இன் பிரகாரம், பாராளுமன்ற நடவடிக்கைமுறை களினூடாக நாட்டின் தேசிய அபிவிருத்தி முன்னெடுப்பு பற்றிய பகிரங்க நிதி மற்றும் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு மீதான தத்துவம் பாராளுமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாலும்;

மதிப்பீட்டின் ஊடாக செயற்திறன் வாய்ந்த முன்னெடுப்புகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பதனாலும்;

இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றலைக் கட்டியெழுப்புவதை உறுதிசெய்வதற்காக பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை மேற்கொள்வதற்குப் பாராளுமன்ற விசேடகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:-

(அ) சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுகள் மற்றும் முகவராண்மைகளுடன் ஆலோசித்து தேசிய கொள்கைகளை வகுத்தலும் சட்டங்களை இயற்றுதலும்;

(ஆ) நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களையும் முகவராண்மைகளையும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் வழிகாட்டுதலும் ஒருங்கிணைத்தலும்;

(இ) மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றை மேம்படுத்துவதில் அரசாங்க - தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்;

(ஈ) ஊழல், தவறான முகாமைத்துவம் மற்றும் வீண்விரயத்தைத் தவிர்க்கும் அதேவேளை, மதிப்பீடுகள் மூலமாக நல்லாட்சி மற்றும் தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளுதலின் விழுமியங்களை மேம்படுத்துதல்;

(உ) போதியளவு உள்நாட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தலும் சர்வதேச நிதியிடும் வளங்களைக் கண்டறிதலும்;

(ஊ) நாடுகளுக்கு இடையிலான துறைசார்ந்த நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் பிராந்திய மற்றும் அனைத்துலக மட்டங்களில் பகிர்ந்துகொள்ளுதல்;

(எ) பாராளுமன்றத்தின் தற்போதுள்ள மேற்பார்வைப் பொறிமுறையின் வெளியீடுகள் மற்றும் விளைவுகளை முக்கியமாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (COPA ) மற்றும் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் (COPE ) பணிகளை மதிப்பீட்டின் மூலம் பரிசீலித்தல்;

(ஏ) மதிப்பீட்டிற்கென சட்டவாக்க நிலையியற் குழுவொன்றை ஏற்படுத்தல்;

(ஐ) பாராளுமன்றத்தின் சட்டவாக்க மற்றும் மேற்பார்வைப் பணிகளுக்கு வசதியளிப்பதற்கு, பாராளுமன்றத்தின் ஆராய்ச்சிப் பிரிவினது பணிகளை "*பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு*" இற்கு விரிவுபடுத்தல்;

(ஒ) தேசிய மதிப்பீட்டு ஆற்றலை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைப்புச் செய்வதற்கு தேசிய அமைப்பொன்றை நிறுவுதல்;

(ஓ) புலமையாளர்கள், அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுத் துறைகளில் தொழில் புரிபவர்களைக் கொண்டமைந்த நிபுணர் குழு ஒன்றையும் வலையமைப்புகளையும் தாபித்தல்; அத்துடன்

(ஔ) மேற்சொன்ன விடயப்பரப்புகளுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடயங்களினதும் பரிசீலனை.

2. (அ) குழு மற்றும் அதன் தவிசாளர் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) 101 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களைக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தின் முன் அல்லது குறித்த குழுவின் முன் தோன்றி அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் பத்திரம், புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு எந்தவோர் ஆளுக்கும் பணிப்பு விடுப்பதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் அல்லது உரிய நோக்கத்திற்காகக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சாட்சிகளை வாய்மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கும் அல்லது வேறு விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) பாராளுமன்றத்திற்கு வெளியே, நாட்டின் ஏதேனும் பகுதிகளில், கூட்டங்களை நடத்துவதற்கும்;

(உ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஊ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

* 4.

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,*— நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 6அ மற்றும் 19அ பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 115அ என்னும் பிரிவின் கீழ் வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்களுக்கான தகவல்கள் தொடர்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 28 ஆம் திகதிய 2108/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,*— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம், காலநீடிப்பு தொடர்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 16 ஆம் திகதிய 2106/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரின் கீழ் வாகனம் வெளியேற்றும் மாசுத் தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தரங்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 2019.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2012),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.11.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 8.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 9.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 10.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2017.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.02.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய 2018.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 12.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2018.07.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 13.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2018.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 14-1A பிரிவிற்கமைய 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.05.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 16.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 14-1A பிரிவிற்கமைய 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.05.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 17.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) உட்பிரிவிற்கமைய பிரிவிற்கமைய, 2018.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 18.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) ஆம் பிரிவிற்கமைய 2017.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.12.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 19.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவிற்கமைய, 2016.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.05.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.09.19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 21.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 யூலை 11 ஆம் திகதிய 2079/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 01 ஆம் திகதிய 2091/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிய 2104/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 யூலை 10 ஆம் திகதிய 2079/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2092/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.3),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 நவம்பர் 15 ஆம் திகதிய 2097/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

